# Tholkappiyathil Maruthuvam

**Dr. P.G. Saraswathi**
*Assistant Professor, Tamil Research Centre*
*S.T. Hindu College, Nagercoil*

**Abstract**
*Our traditional medicine is best developed. Our ancestors were well aware of hundreds of herbs and the methods of treating diseases. All the people born in the world want to live for centuries. Even if the world is full of all wealth to live with a person, he will be useless if he is suffering from a moment of sickness. 'Life without sickness is a lack of wealth,' said the elders. There are news about biology in Tholkappiyam and news about medicine. Tholkappiyam is the basis of the grammar book that has been medicine since ancient times.*

***Keywords:*** *Disease, Medicine, Othi Tree, Fig Tree, Cinnamon, Sandalwood, Willowtree, Banyan Tree*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346612

**References**

1. Easwari, A.R. – An Introduction to Folk Medicine, Vakarayan Palayam Post, Karumatham Patti Road, Coimbatore District.
2. Sampath, K.K. – Tamil Medicine, Tamizhan Publications, Bhajanai Koil Street, Choolaimedu, Chennai. First Edition, February 2001.
3. Tamizhannal. – Tholkappiyam – Sol (The Study of Words), Meenakshi Book Stall, 48 Mayuravallakam, Thanappamuthali Street, Madurai.
4. Puliyur Kesigan. – Tholkappiyam, Sri Chenbaka Publications, Pandibazaar, Chennai. First Edition, June 2010.
5. Viswanathan, A. – Kalithogai, New Century Book House (P) Ltd., Ambattur, Chennai.

# தொல்காப்பியத்தில் மருத்துவம்

***முனைவர் ப.கோ. சரஸ்வதி***
உதவிப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்

***ஆய்வுச் சுருக்கம்***
*நமது பாரம்பரிய வைத்தியமுறை மிகச் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. நமது முன்னோர்கள் நூற்றுக்கணக்கான மூலிகைகளையும் அவற்றை பயன்படுத்தி நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கும் முறைகளையும் நன்கு அறிந்திருந்தனர். உலகில் பிறந்த மனிதர் யாவரும் நூற்றாண்டு காலம் வாழவே விரும்புவார். இந்த உலகம் ஒருவனுக்கு வாழ்வதற்கு அனைத்து செல்வங்களும் நிறைந்து இருந்தாலும் அவன் நோய் நொடியோடு துன்பப்பட்டு இருந்தால் அச்செல்வங்கள் யாவும் பயனற்றதாகிவிடும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்றார் பெரியோர். தொல்காப்பியத்தில் வாழ்வியல் பற்றிய செய்திகள் இடம்பெறுவதோடு மருத்துவம் பற்றிய செய்திகளும் இடம்பெறுகின்றன. பண்டைய காலம் முதல் மருத்துவம் இருந்தது என்பதற்கு இலக்கண நூலான தொல்காப்பியம் அடிப்படையாக அமைகிறது.*
***திறவுச் சொற்கள்:*** *நோய் மருத்தவம், மருந்து, ஓதி மரம், அத்தி மரம், இலவம், சந்தனம், வேல் மரம், ஆல மரம்*

**முன்னுரை**

மருத்துவத்தின் பெருமையை பழங்காலத்திலேயே தமிழர்கள் அறிந்திருந்தனர். சங்ககாலத் தமிழ் ஏடுகளிலும் மருத்துவக் குறிப்புகள் காணப்படுகின்றன. இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும் பல மருத்துவச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியர் காலம் இயற்கை நெறிக்காலமாகும். இயற்கை நெறிக் காலத்தை ஒட்டியே மருத்துவமும் அமைந்திருக்கிறது.

**மருத்துவம் விளக்கம்**

பண்டைய கால மக்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற நோயை தீர்ப்பதற்காக சில மூலிகைகளைப் பயன்படுத்தினர். அவை மருத்துவ குணம் உடையவை. அதிலிருந்து தோன்றியது தான் மருத்துவம். மனிதர்களுடைய உடம்பில் ஏற்படுகின்ற நோயை தீர்க்கும் மாபெரும் சக்தியாக மருத்துவம் விளங்குகிறது. மருத்துவம் பற்றி பண்டைய காலம் முதல் இன்று வரை பல நூல்கள் உள்ளன. அவை மருத்துவத்தின் சிறப்பையும் நோய் தீர்க்கும் முறைப் பற்றியும் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது.

**மருந்து பொருள்**

மருந்து இச்சொல் "மரு" என்ற வேரின் அடிப்படையாகப் பிறந்திருக்க வேண்டும். மரு என்றால் பரிமளப்புல், மலைவாசனை, மருக்கொழுந்து, இளம்தளிர் என்று பொருள்படும். மலைகாடுகளில் கிடைக்கும் வெவ்வேறு மணமும், குணமும் கொண்ட மூலிகைகளைக் கொண்டு செய்யப்படும் பொருள் நோய்க்கு எதிராக அமைந்ததால் இது "மருந்து" என்று வழங்கி இருக்கலாம்.

"மருந்து" என்ற சொல்லுக்கு மனிதனிடத்திலும் பிற உயிர்களிடத்திலும் நோய்களைக் கண்டறியவும், நோய்கள் வராமல் தடுக்கவும் மற்றும் நோய்களைக் குணப்படுத்தவும் பயன்படுத்தப்படும் பொருள் என்று சொல்லப்படுகிறது. மேனாட்டில் வழங்கப்படும் "மருந்தியல்" என்ற சொல் மருந்து என்ற

கிரேக்கச் சொல்லிருந்து உருவானது பிரெஞ்சு சொல்லிருந்து தோன்றியது என்றும் மு.துளசிமணி குறிப்பிடுகிறார்.

மருந்து என்னும் சொல்லுக்கு அமுதம், ஒடதம், ஔடதம் என்னும் பொருளைத் தருகிறது தமிழ்மொழியகராதி. மருந்தியல் பற்றிய நூல்களை முதன்முதலில் உலகுக்கு வழங்கிய பெருமை இந்தியாவுக்கும் சீனாவுக்கும் உரியது என்றும் கி.மு. 2500 -ஆம் ஆண்டில் "சரகர்" என்னும் மருத்துவர் தாவரங்களிலிருந்து பெறப்படும் முந்நூறு மருந்துகளைப் பற்றி குறிப்பெழுதியுள்ளார் (நாட்டுப்புற மருத்துவம், ப.8) என்றும் சுட்டப்படுகிறது.

## மருந்தின் இலக்கணம்

சங்க காலத்தில் மருந்தைப் பற்றியும் மருத்துவப் பொருள்கள் எப்படி, எங்கிருந்து பெறப்பட்டன என்பதையும் இலக்கியக் குறிப்புகள் கூறுகின்றன. ஒரு நல்ல மருந்தின் இலக்கணம் என்ன என்பது பற்றி கூறும் போது, மருந்தானது நோயைத் தடுத்து உயிரைக் காக்க வல்லதாக இருக்க வேண்டும். இதை,

**இன்னுயிர் செய்யும் மருந்து (கலித். 32: 5)**

என்று கலித்தொகை குறிப்பிடுகிறது.

மருந்து பொறுக்க முடியாத வருந்தும் துன்பத்தைப் போக்க வேண்டும். இதை,

**அருந்துயர் ஆரஞர் தீர்க்கும் மருந்து**
**(கலித். 40)**

மருந்து உடலில் உண்டாகும் நோயை உடனுக்குடனே தீர்த்து நோயுற்றவனை நலம் பெற செய்ய வேண்டும். உடல் நோயினால் ஏற்படும் துன்பம், அதனால் உள்ளத்தில் ஏற்படும் இழிவு, வெறுப்பை தீர்க்க வல்லதாக இருக்க வேண்டும். இந்த நான்கு கூறுகளும் மருந்திற்கு இலக்கணமாயிற்று.

**மறுப்பது உடல் நோய் மருந்தெனலாகும்**
**மறுப்பது உளநோய் மருந்தெனச்சாலும்**
**மறுப்பது இனிநோய் வாராதிருக்க**
**மறுப்பது சாவையும் மருந்தெனலாமே.**
**(திருமந்திரம், பா.8000)**

## தொல்காப்பியத்தில் மருத்துவம்

தொல்காப்பியத்தில் மனிதனின் வாழ்வியல் பற்றிய செய்திகள் இடம் பெறுவதோடு மருத்துவம் பற்றிய செய்திகளும் இடம் பெறுகின்றன. பண்டைய காலம் முதலே மருத்துவம் இருந்தது என்பதற்கு தொல்காப்பியம் அடிப்படையாக அமைகிறது. உலகமும், அதன் படைப்பும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களையும் உள்ளடக்கியுள்ளது. இதனை தொல்காப்பியர்,

**நிலம் தீ நீர் வளி விசும்பொ டைந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்**
**(தொல்.மரபு.91)**

என்று குறிப்பிடுகிறார். இந்த ஐம்பூதங்களும் சமநிலைமின்றிக் கலக்கும் போது உயிர்களின் உடலில் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. அந்த மாற்றங்களை எதிர்கொள்ளும் வலு உடம்பில் இல்லாவிட்டால் நோய் ஏற்படும். தொல்காப்பியத்தில் "மருந்து" என்ற சொல் காணப்படவில்லை. ஆனால் அதே பொருளுடைய "உறை" என்ற சொல் காணப்படுகிறது.

**வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்**
**வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்**
**தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று**
**ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.**
**(தொல்.பொருள்.417)**

வாயுறை வாழ்த்தை விளக்கும் போது வேம்பும் கடுகும் கசப்பானது. அதுபோல பிறர் கூறும் சொல் நம் மனதில் துன்பம் ஏற்பட செய்தலாகிய சொற்களைப் பேசாமல் இனிய சொற்களைப் பேசுதல் வேண்டும் என்று தொல்காப்பியம் எடுத் தியம்புகிறது.

## தொல்காப்பியர் கூறும் மருத்துவ ஒழுக்கம் மற்றும் மருந்து பொருள்கள்

உயிர்கள் நோயின்றி வாழ வழிவகுக்கும் நெறியை "மருத்துவ ஒழுக்கம்" எனக் கூறலாம். அவற்றுள் உடல் தூய்மையும் உள்ளத்தூய்மையும் முதன்மையானவையாகும்.

தமிழர் பண்பாட்டிலும் தமிழ் மக்களின் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் மரமும், செடியும், கொடியும், பூவும் இடம் பெற்றுவிட்டன. தொல்காப்பியரும் தாவரங்களையும் மூலிகைகளையும் அதன் அடிப்படையில் தான் சுட்டுகிறார் என்றுத் தோன்றுகிறது. பொருள் இல்லாமல் அவர் எந்த ஒரு சொல்லையும் பயன்படுத்தவில்லை. அவ்விதமே தாவரங்களின் பெயர்களையும் அவைகளின் மருத்துவ பயன்களைக் கருதியே கூறி இருக்க வேண்டும். அத்தாவரங்களின் ஒரு சிலவற்றின் குணங்கள் பற்றி குறிப்பிடப்படுகிறது.

1. உதி மரம் - ஓதி மரம் - இந்த மரத்தின் பட்டை, குடிநீர் குட்ட நோய் புண்களைக் கழுவ பயன்படும்.
2. அத மரம் - அத்தி மரம் - அத்திப்பால் இரும்பினால் உண்டான புண்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.
3. சேம மரம் - சேராங்கொட்டை - சேராங் கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் குட்ட நோய்க்கும் மேக நோய்களுக்கும் பயன்படும்.
4. இலவம் - தேற்றான்கொட்டை - உடல் தேற்றி, உடல் உறுதிக்கு சித்த மருத்துவத்தில் அதிகமாகப் பயன்படும் தாவரம்.
5. ஆர் - சந்தனம் - வெப்பு நோய்களுக்கு பயன்படும்.
6. ஆல் - ஆலமரம் - இரும்புப்பட்ட புண்களுக்கும், வித்து உடல் தேற்றியாகவும் பயன்படும்.
7. வேல் - வேலமரம் - கருவேல், வெள்வேல், குடைவேல், மீடுவல்பட்டை மருந்தாகப் பயன்படுகிறது.

## போர்ப் பூக்களின் மருத்துவக் குணம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியலுக்கு அடுத்தப்படியாகப் புறத்திணையியல் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியில் தமிழர்களுடையப் போரியல் முறைகள் வெட்சி, வஞ்சி, உழிஞ்ஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்னும் ஏழு பிரிவாகப் பிரித்து விளக்கப்பட்டுள்ளன. போருக்குச் செல்லும் வீரர்கள் குறிப்பிட்ட சில பூக்களைச் சூடிச் சென்றனர். ஏனெனில் அவை மருத்துவக் குணம் நிறைந்த பூக்கள் அதனால் தான் வீரர்களை அப்பூக்களைச் சூடியுள்ளனர்.

### வெட்சிப்பூ

**வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**
**ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்**

***(தொல். பொருள்.60)***

பகைவரது நாட்டின் மேல் போர் புரிய எண்ணிய வேந்தன் முதலில் படைகளை அனுப்பி அங்குள்ள ஆநிரைகளைக் கவர்ந்து வரச் செய்வான், அரசன் ஆணையை மேற்கொண்ட வீரர்கள் வெட்சிபூவைச் சூடிச் செல்வர். ஏனெனில் ஆநிரைகளைக் கவரும் போது வீரர்களுக்கும் மீட்கும் வீரருக்கும் சண்டை உருவாகும். சண்டையின் போது காயப்பட்டுக் குருதி பாயும், புண்பட்ட இடத்தில் வெட்சிப்பூவை வைத்தால் குருதி அடங்குவது மட்டுமின்றி புண்ணையும் ஆற்றும் வெட்சிப் பூவை வீரர்கள் தலையில் சூடிக் கொள்வதால் நடைப்பயணத்தில் ஏற்படும் களைப்பையும் தடுக்கும் ஆற்றல் உடையது.

### வஞ்சிப்பூ

**வஞ்சி தானே முல்லையது புறனே**
**எஞ்சா மண்தசை வேந்தனை வேந்தன்**
**அஞ்சுதகத் தலைச் சென்று அடல் குறித்தன்றே**

***(தொல். பொருள். 64)***

மண்ணாசை உடைய பகைவேந்தனைப் போர் புரிந்து அழிக்க அவன் நாட்டில் படையெடுத்துச் செல்லுதல் வஞ்சித்திணையாகும்.

இவ்வாறு செல்லும் போது வஞ்சிப்பூவினைச் சூடிச் செல்வர். இப்பூ இடுப்புக்கு உறுதியைக் கொடுத்து களைப்பையும் போக்கும் மருத்துவத் தன்மைக் கொண்டது.

### உழிஞைப் பூ

**உழிஞை தானே மருதத்துப் புறனே**
**முழு முதல் அரணம் முற்றலும் கோடலும்**
**அனைநெறி மரபிற்கு ஆகும் என்ப**
**(தொல்.பொருள்., பா.66)**

படையுடன் வந்த வேந்தன் பகைவனது அறனைச் சுற்றி வளைத்துக் கொள்ளுதலும், உள்ளே இருக்கும் வேந்தன் அதை பாது காப்பதும் உழிஞை ஆகும். இப்போருக்கு சொல்வோர் உழிஞைப் பூவைச் சூடுவர். உழிஞைப் பூ முட்டுகளில் ஏற்படும் வலியையும் காயங்களையும் நீக்கி விடும்.

### தும்பைப் பூ

**தும்பை தானே நெய்தலது புறனே**
**மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்**
**சென்றுதலை யழிக்கும் சிறப்பிற்று என்ப**
**(தொல்.பொருள்.70)**

இரு பெரும் வேந்தரும் போர் புரியும் போது தும்பைப் பூவினைச் சூடிச் செல்வர். போரின் போது காயம் ஏற்பட்டு மயங்கிக் கிடப்பவர் மூக்கில் இருதுளி தும்பைப் பூவின் சாற்றைவிட்டால் வீரர்கள் மயக்கம் தெளிந்து எழும்புவார்கள்.

### வாகைப் பூ

**வாகை தானே பாலையது புறனே**
**தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்**
**பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப**
**(தொல்.பொருள். 73)**

பகை வேந்தனையும் அவன் படைகளையும் அழித்த அரசனும் மற்றவர்களும் வாகைப் பூ சூடியவராக ஆரவாரித்து இன்புறுவர். வாகைப் பூ மயக்கமுறு மகிழ்ச்சியைத் தரக்கூடியது. மேலும், இது புண்களைக் குணமடையச் செய்யும். மேகப் பிணி வராமல் தடுக்கும்.

### காஞ்சிப் பூ

**காஞ்சி தானே பெருந்திணைப் புறனே**
**பாங்கருஞ் சிறப்பிற் பின்னெறி யானும்**
**நில்லா உலகம் புல்லிய நெறித்தே.**
**(தொல். பொருள்.76)**

நிலையாமை பற்றிக் கூறுவது காஞ்சித் திணையாகும். காஞ்சிப் பூ காம உணர்வுகள் வராமல் தடுப்பதுடன், வயிற்றுவரியையும் தீர்க்கும் தன்மையுடையது.

### முடிவுரை

தொல்காப்பியத்தில் மனிதனின் வாழ்க்கை சார்ந்தக் குறிப்புகள் மட்டுமில்லாமல் மருத்துவம் சார்ந்தச் செய்திகளும் உள்ளன. ஐம்பூதங்களின் மாற்றத்தின் மூலமாகவும் மக்களுக்கு நோய் ஏற்படுகிறது. உயிர்கள் நோயில்லாமல் வாழும் நெறி மருத்துவ ஒழுக்கம் ஆகும். புறத்திணையில் போருக்கு செல்லும் வீரர்கள் அணிந்து செல்கின்ற பூக்கள் மருத்துவக் குணம் நிறைந்ததால் அப்பூக்களை வீரர்கள் அணிந்து செல்கின்றனர். மேலும், பல்வேறு மருந்து பொருள் மரம், செடி, கொடிகளிலிருந்து கிடைக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

### துணைநூற்பட்டியல்

1. ஈசுவரி, ஏ.ஆர்., - நாட்டுப்புற மருத்துவம் ஓர் அறிமுகம், வாகராயன் பாளையம் அஞ்சல், கருமத்தம் பட்டி வழி, கோவை மாவட்டம்
2. சம்பத், க.க., - தமிழ் மருத்துவம், தமிழன் பதிப்பகம், பஜனை கோயில் தெரு, சூளைமேடு, சென்னை. முதல் பதிப்பு - பிப்ரவரி - 2001.

3. தமிழண்ணல், தொல்காப்பியம் - சொல், மீனாட்சி புத்தக நிலையம், 48, மயூராவளாகம், தானப்பமுதலி தெரு, மதுரை.

4. புலியூர்கேசிகன், தொல்காப்பியம், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், பாண்டி பஜார், சென்னை, முதற்பதிப்பு - ஜுன் 2010.

5. விசுவநாதன், அ., கலித்தொகை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை